www.padippakam.com

# ஈழதாசன்

## உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்

♦ நவம்பர் – 2005 ♦ இதழ் எண் : 129 ♦ விலை ரூ. 5/–

## தமிழ்ஒளி பாருங்கள் !
## தமிழ்அணி சேருங்கள் !



திரு. **எஸ்.எஸ்.குகநாதன்**
தலைவர்



திரு. **குலாம் உசேன்**
இயக்குநர்

DAN
ரீ தமிழ்ஒளி

அய்ரோப்பா, அமெரிக்கா, கனடா, பிரான்சு, இலங்கை, இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

# இலண்டன் 'புதினம்'
# பத்தாவது ஆண்டு விழா
# (1995 - 2005)

## 'புதினம்' உலகளாவிய தமிழ்ச்சிறுகதைப் போட்டி

இலங்கையில், யாழ்ப்பாணம் 'ஈழநாடு,' கொழும்பு 'தினகரன்' பத்திரிகை ஆகியவற்றில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய **ஈ. கே. ராஜகோபால்** அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு இலண்டனில் வெளிவரும் 'புதினம்' மாத இதழின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் தமிழ்ச் சிறுகதைப் போட்டி நடைபெற உள்ளது.

**இலங்கை நாணயப்படி பரிசுகள் வழங்கப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| முதலாவது பரிசு | ரூ. | 50,000 |
| இரண்டாவது பரிசு | ரூ. | 20,000 |
| மூன்றாவது பரிசு | ரூ. | 10,000 |
| 10 ஆறுதல் பரிசுகள் தலா | ரூ. | 2,000 |

**போட்டி விதிமுறைகள் :**

1. எந்த நாட்டிலிருந்தும் தமிழில் சிறுகதை எழுதலாம்.
2. எந்தத் தலைப்பிலும் சிறுகதை எழுதலாம்.
3. சிறுகதை தட்டச்சு (டைப்) செய்து அனுப்புவதானால் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும், கையெழுத்துப் பிரதியானால் எட்டுப் பக்கங்களுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
4. சிறுகதை வேறெந்தப் பத்திரிகையிலோ, சஞ்சிகைகளிலோ, நூல்களிலோ பிரசுரிக்கப்பபட்டிருத்தல்கூடாது.
5. சிறுகதை சொந்தக் கற்பனையில் உருவான கதையாக அமைதல் வேண்டும். மொழி பெயர்ப்பு தழுவல் கதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. தமது சொந்தக் கற்பைனயில் உருவான கதை என்பதை கதாசிரியர் எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
7. போட்டியில் வெற்றி பெற்ற கதைகள் புதினம் பத்திரிகையிலும், புத்தகமாகவும், வெளியிடப்படும்.
8. ஏற்றுக்கொள்ளப்படாத சிறுகதைள் திருப்பி அனுப்புவதற்கு உத்தரவாதமளிக்க முடியாததாகையால், கதைகளின் போட்டோ பிரதியை எடுத்துக்கொண்டு அனுப்பி வைப்பது நல்லது.
9. போட்டிகளில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
10. போட்டிக்குரிய முடிவு தேதி 11-01-2006

**கதைகள் அனுப்ப வேண்டிய விலாசம் :**

**The Editor,**
**PUTHINAM - 38, Moffat Road, London SW17 7EZ U.K.**



படிப்பகம்

www.padippakam.com



31-07-2005 அன்று தமிழ்க் நாகர்கோவிலில் உலகத் தமிழர் பேரமைப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு மாநாடு நடைபெற்றது. அந்நிகழ்வில் டென்மார்க்கில் இருந்து பங்குபெற்ற கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா பேசுகிறார்.

## சன்னல் துளிகள்

✦ ரொம்ப நாளா காணலையே
நல்லா இருக்கீங்களா
குடும்ப மருத்துவர் கேட்டார்!

✦ அசையாமல் நின்ற
கோடைகால மரம் அசைகிறது
அணில் குஞ்சுகள்!

✦ காலை நேரம்
சாலையை கடக்கும் பெண்
ஓட்டமும் நடையுமாக சிறுவன்!

✦ பனை உயர அலை
ஊர் திரும்பும் ஆசை
புலம்பெயர் வாழ்வு!

✦ துப்பாக்கிக் குழாய்
சுத்தம் செய்யும் சிப்பாய்
யுத்த நிறுத்தம்!

✦ அதிகாலை நேரம்
முகச்சவரம், வெந்நீர் குளியல்
தூக்குக் கைதி!

ம.தி.சாந்தன்
மத்திய மரண தண்டனை சிறைவாசி,
வேலூர்-2.

* சிறைத்துறை அலுவலரால்
வெளியிட அனுமதிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# போலந்து நாட்டின் தமிழ் மாணவிகள்



போலந்து நாட்டில் தமிழ் கற்பிக்கச் சென்று அண்மையில் இந்தியாவுக்குத் திரும்பிய பேராசிரியர் தமிழவன் அவர்கள் சென்னை வந்த போது தனது அனுபவங்களைச் சென்னைப் பல்கலைக் கழக அரங்கில் பகிர்ந்து கொண்டார். அதிலிருந்து சில துளிகள்...

முன்பு, போலந்தில் ஒரு பல்கலைக் கழகத்தில்தான் தமிழ் பயிற்றுவிக்கப்பட்டது. இன்று இரண்டு பல்கலைக் கழகங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது. Indian Studies என்ற தலைப்பில் அங்கு தமிழ் கற்பிக்கப்படுகிறது.

நான் அங்குப் பணிபுரிந்த மூன்றரை ஆண்டுகளிலும் அதிகமாகப் பெண்களே தமிழைப் படித்தனர். மாணவர்கள் அதிகமாக இல்லை. தன்னுடைய சுயவிருப்பத்தின் அடிப்படையில் தமிழைக் கற்க வந்ததாக மாணவிகள் கூறுகின்றனர்.

அங்குள்ள முதுகலைப் பாடத்திட்டம் அய்ந்தாண்டுகளுக்கு உரியது. அங்குத் தமிழில் அண்மையில் ஆய்வுப்பட்டம் (Ph.D) பெற்றவர்கள் இரண்டு பேர் உள்ளனர். அதில் ஒருவர் ஜெயகாந்தனைப் பற்றி ஆய்வு செய்தவர் இன்னொருவர் குறவஞ்சி பற்றி ஆய்வு செய்தவர். இவர்களுக்கு நேர்முகத் தேர்வு செய்தவர் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் அலெக்சாண்டர் துப்பியான்சுகி. அவர் என்னோடு தமிழிலேயே பேசினார்.

பொதுவாக உலக நாடுகளில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது, நாம் தமிழில் பேசினால் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று அய்ரோப்பியர்கள் நினைக்கின்றனர். இந்தியா என்ற நாடு பற்றித் தெரிந்தாலும் இந்தியாவில் உள்ள தமிழர்களைப் பற்றித் தெரிவதே இல்லை.

மேலும் அங்குள்ள போலீஷ் மக்கள் மிகவும் அன்பாகவும், மரியாதையோடும் பழகுகிறார்கள். அங்கு ஆட்சி மொழி போலீஷ் மொழியே. அங்குள்ள மூத்த தலைமுறையினர் பெரும்பாலும் ரஷ்ய மொழியும் போலீஷ் மொழியும் பேசுகின்றனர். புதிய தலைமுறையினர் ஆங்கிலம் அதிகம் பேசுகின்றனர். 'அமெரிக்கா வாருங்கள்' என்ற விளம்பரப் பலகைகளை வார்சா எங்கும் பார்க்க முடிகிறது. புதிய தலைமுறையினரின் இலக்கு அமெரிக்கா செல்ல வேண்டும் என்பதாக இருக்கிறது.

வார்ஸா பல்கலைக் கழகத்தில் தமிழ்நூல் நிலையம் இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



புதிய நூல்கள் அதிகமாக இல்லை. தமிழ் நூல்களை ICCR மூலமாகத்தான் வாங்க வேண்டியுள்ளது. அதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதால் உடனே வாங்க முடியவில்லை. ஆனால் இந்திப் புத்தகங்களை அவர்கள் உடனே வாங்க முடிகிறது.

அங்கிருந்த மாணவர்கள் இந்தியா வரும்போது ஏதாவது உதவித்தொகை ஏற்பாடு செய்து தர முடியுமா ? என்று கேட்டனர். ஆனால் இந்தி, சமசுகிருதம் படிக்கும் மாணவர்களுக்கு இந்தியா வருவதற்கு உதவித்தொகை கிடைக்கின்றன. ஒரு பேராசிரியர் இந்தியா வர இந்தியத் தூதரகமே செலவுகளை ஏற்றுக் கொள்கிறது. போலந்து அரசாங்கம் அதிகமாகச் செலவு செய்வதில்லை.

# தமிழ் தெரியும்... தமிழ்நாடு தெரியாது !

அங்குள்ள மாணவர்கள் ஏதோ ஓர் உந்துதலால்தான் தமிழ் படிக்கிறார்கள். ஆனால் வேலை வாய்ப்பு மொழியாக அங்கு தமிழ் இல்லை. இந்தி படித்தால் அதிக அங்கீகாரம் கிடைத்து விடுகிறது. ஆங்கிலத்தில் வருகின்ற புத்தகங்களை உடனடியாக போலீஷ் மொழி பெயர்ப்பில் கிடைக்கின்றன.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் சரியானபடி நிதி ஒதுக்கீடு செய்தால் அயல் நாட்டு மாணவர்கள் அதிகமாகத் தமிழ் கற்க வாய்ப்பு ஏற்படும்.

போலந்து மக்கள் நன்றாக பழகினாலும் அய்ரோப்பிய மனப்பான்மையுடன்தான் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ்மொழியைப் படித்த பிறகு அதிகமான பயன்பாட்டு மொழியாகத் தமிழ் இல்லாததால் மறந்து விடுகிறார்கள். பின்னாளில் தமிழ் என்று ஒரு மொழியைப் படித்ததாகத் தங்கள் பிள்ளைகளுக்கோ, பேரக் குழந்தைகளுக்கோ சொல்ல ஒரு வாய்ப்பு அவர்களுக்கு உண்டு.

**- முத்தையா வெள்ளையன்**

✦ தினமணி கதிர்

## வாசகர் வட்டம்

சகோதரர் என்.எஸ்.பிரபு குடும்பப் படம் பார்த்து மகிழ்வடைந்தோம். அடிக்கடி வானலையில் கேட்கும் குரல் அவர் குரல். அப்படித் தெரிந்தவரைப் பார்ப்பது மகிழ்வு தானே !" பாட்டன் தமிழை வீட்டில் பேசுவோம்" அருமையான வரிகளல்லவா ? நாமும் இப்படி இங்கு கூறலாம். சிலர் வீட்டிலும் அந்நிய மொழிதானே ! பல விடயங்களை அறிகிறோம். உங்கள் நலங்களை ஆண்டவன்.

– திருமதி. **வேதா. இலங்காதிலகம்,** டென்மார்க்.



படிப்பகம்

www.padippakam.com

# அறம்பாடு !

எல்லாம் அறிந்த ஆண்டவனுக்கு
தமிழ் மட்டும்
அந்நியம் என்றால்
அவன் பெயர் எதற்கு
"ஆண்டவன்?"

ஆறு கோடித் தமிழர்களின்
மூச்செல்லாம் தமிழாய்
இருக்கும் போது
"அவனுக்கு" மட்டும் ஏன்
அந்நிய மூச்சு ?

தமிழாய்ந்த தமிழரெல்லாம்
தமிழகத்தில் தமிழ் மகனாகும்போது
தமிழறியா இறைவன் மட்டும்
இன்றும் கோயில்களில் !

பிள்ளைக்கறி கேட்ட
இறைவனுக்கு
தமிழமுதால் வழிபட்டால்
தடுப்பதற்கு எவரெவரோ
விரைகின்றார்.

கல் தோன்றி மண் தோன்றா
காலத்துத் தமிழினையே
தடுத்துவிட்டால்
எம் கவிஞன் சொன்னதுதான்
பதிலாய் அமையும் ;

"கொடியோர் செயல் அறவே
கொலை வாளினை எடடா ?"

– ஆறு. கணேசன்,
திருச்செந்தூர், தூத்துக்குடி.

******************

# ஒரு ஈழத்தாயின் வேதனை

நானோர் தமிழச்சி நாட்டை எந்த
நாய் கழுதை ஆண்டாலும்
பரவாய் இல்லை.
என் நாவுரைக்கும் செந்தமிழுக்கு
என் தாய் மண்ணின் விடிவுக்கு தீங்கு செய்தால்
என் பிள்ளை என்றாலும் எரித்திடுவேன் !
என் தாய்ப்பாலில் சுவையில்லை என்றும்
என் தாய்மடியில் சுகமில்லை என்றும்
தாய் மண்ணை விலைபேசும் பிள்ளையென்றால்
நாய்ப்பாலை அவன் வாயில் ஊற்றி
நக்கிப் பார் சுவை தெரியும் என்பேன் !
ஏழை பணக்காரன் அதிகாரம் அன்று
ஏமாற்றும் கொடிய அநியாய ஆட்சிமுறை இன்று
ஏமாற்றும் உலகமிது ஆச்சு – இங்கே
மானமுடன் வாழ்ந்திடுதல் கேள்விக்குறி ஆச்சு !
பெற்றவர்க்கு மண்ணுக்கு பெருமைதரும் பிள்ளை
பிள்ளை என்ற பெயருக்கே பெருமை கொண்ட பிள்ளை – பதவிக்காய்
பெற்றவளை விலைபேசும் இழிகுணத்து பிள்ளை
பிய்த்தெறிந்து எரித்திட்டால் பிறகென்ன ஆச்சு !



– வேலணையூர். பொன்னண்ணா, டென்மார்க்.



படிப்பகம்

www.padippakam.com

## பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்களின்

# செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்

### நூல் வெளியீட்டு விழா

சென்னை, அக்.29 -சென்னை அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் அரங்கின் சொற்பொழிவுக் கூடத்தில் 29-10-2005 சனிக்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.

புலமையாழம் பொருந்திய ஈழத் தமிழ்ப் புலவர்கள் வரிசையில் முத்தமிழ்ப் புலமையோடு திகழ்ந்த பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதியுள்ள இந்நூலை இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் பதிப்பித்துள்ளது. சென்னை உலகத்தமிழர் பதிப்பகம் இணைந்து வெளியிடுகிறது.

தொழிலதிபர் ஏ.ஆர்.கே. சண்முக சுந்தரம், திருமதி சோலையம்மாள் இணையர் குத்து விளக்கேற்றி விழாவைத் துவக்கி வைக்கிறார்கள்.

கலைமாமணி டி.கே.எஸ், கலைவாணன் தமிழ் வாழ்த்துப் பாட, உலகத் தமிழர் பதிப்பக உரிமையாளர் இரா. மதிவாணன் அனைவரையும் வரவேற்கிறார்.

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகச் செயலாளர் ஐ.தி. சம்பந்தன் தொடக்க உரையாற்றுகிறார். இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத் தலைவர் பொன்.பாலசுந்தரம் அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

முன்னாள் அமைச்சரும் கம்பன் கழகத் தலைவருமான இராம. வீரப்பன் நூலை வெளியிட்டு உரையாற்றுகிறார். அரிமா வைரசேகர் நூலின் முதல்படி பெற்றுக்கொள்கிறார்.

இந்நூலினை திறனாய்வு செய்து பேராசிரியர் பெரியார்தாசன் ஆய்வுரை வழங்குகிறார். எழுகதிர் ஆசிரியர் முனைவர் அரு. கோபாலன் நாவலாசிரியர் செ. கணேசலிங்கம் வாழ்த்துரை நல்குகிறார்கள்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் க.ப. அறவாணன் சிறப்புரையாற்றுகிறார்.

உலகத் தமிழர் மைய துணைச் செயலாளர் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன் நன்றி நவில, நாட்டுப்பண் இசையோடு விழா நிறைவு பெறுகிறது.

---

**திருத்தம்**

சென்ற இதழில் நாகர்கோவில் மாநாட்டுச் செய்தியில் "நான் நகரசபை உறுப்பினர் என்றும், கூட்டத்திற்கு எண்ணாயிரம் பேர் வந்ததாகவும், தமிழ் பல்கலைக் கழக மொழியாகப் போவதாகவும் நான் கூறியதாக" வந்துள்ள செய்தி தவறானது என கவிஞர்.பொன்னண்ணா திருத்தம் கோருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாண்டுக்குரிய ஆய்வுப் பொருள் :

## 'தினத்தந்தி' நிறுவனர் சி.பா. ஆதித்தனாரின்

# தமிழ்த் தொண்டு

1. தமிழகத்தின் பதினான்கு பல்கலைக் கழகங்களைச் சார்ந்த கல்லூரிகளில் கல்வி பயிலும், ஆண், பெண் ஆகிய இருபாலரும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தோவியம் முழு வெள்ளைத் தாளில் ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமலும் அறுபது பக்கங்களுக்கு மிகாமலும் அமைய வேண்டும்.

3. இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத் துறையில் செல்வாக்கு மிக்கதாக மிளிரும் உரைநடை மற்றும் திறனாய்வு இலக்கியம் பற்றிய ஆய்வு வேண்டற்பாலது. இதழியல்துறை, பதிப்புத்துறை, திறனாய்வுத்துறை, சட்டப்பேரவை, அரசியல்துறை, மொழிக்களம் ஆகிய பல்வேறு நிலைகளில் பைந்தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள வழக்கறிஞர் சி.பா. ஆதித்தனார் அவர்கள் குறித்து விரிவாக ஆராய்வது விரும்பத்தக்கது.

4. ஆய்வுக் கட்டுரையினை மாணவர் எழுதியதற்கான உறுதிமொழியினை அவர் பயிலும் கல்லூரி முதல்வர் அல்லது தமிழ்ப் பேராசிரியர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

5. தனித்தாளில் மாணவர் பெயர், பயிலும் வகுப்பு, கல்லூரிப் பெயர், இல்ல முகவரி ஆகியவற்றைக் குறித்து அறிவித்திட வேண்டும்.

6. ஆராய்ச்சிக் கட்டுரை வந்து சேருவதற்குரிய இறுதிநாள் : 31.12.2005 காரிக் கிழமை

7. கருத்தோவியங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
முனைவர். பா. வளன் அரசு,
தலைவர், தனித்தமிழ் இலக்கியக் கழகம்,
3, நெல்லை நயினார் தெரு, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.

8. சிறப்பு வாய்ந்த மூன்று கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் பரிசுக்குரிய எழுத்தோவியம் தீட்டுபவருக்குத் தங்கப்பதக்கமும் அவர் பயிலும் கல்லூரிக்கு வெள்ளி உருள்கலனும் அளிக்கப்படும். இரண்டாவது மூன்றாவது பரிசுகளாக முறையே ஐந்நூறு, முந்நூறு வெண்பொற்காசுகள் மதிப்புள்ள தமிழ் நூல்கள் தரப்பெறும்.

9. பரிசுகள் 26.2.2006 காரி மாலையில் நெல்லையில் நிகழும் தமிழ்த் திருவிழாவில் வழங்கப்படும்.

முனைவர். பா.வளன் அரசு
தலைவர்



படிப்பகம்

www.padippakam.com

# முகம்

# உண்மையான முகவரி என்ன ?

சென்னையிலிருந்து வெளிவருகிறது முகம் என்றொரு சிறு பத்திரிகை, பெரியார் ஈ.வெ.ரா. கொள்கையை எடுத்து இயம்பும் இதழ். இதன் ஆசிரியர் தமிழின உணர்வாளர் மாமணி அவர்கள்.

270 இதழ்களை வெளியிட்டுள்ள முகம் இதழை நாம் தொடங்கியதில் இருந்தே வாசித்து வருகிறோம். அதன் இலட்சியம், கொள்கை, தமிழ் முழக்கம், இன விடுதலைக் குரல் ஆகியனவற்றை ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

தமிழகத்தின் தலைநகரில் சிற்றிதழ்களின் கம்பீரமான முகமாக - பல அறிஞர் பெருமக்களின் அகமாக வந்து கொண்டிருக்கும் சீரிய சஞ்சிகை அது .

செப்டம்பர் - 2005 இதழின் முகப்போவியமாக 'மனிதநேய சோதிடர்' எஸ்.ஏ.பி.வரதன் என்றொருவரை அறிமுகப்படுத்தி, முகமெல்லாம் சேறு பூசி நிற்கிறது.

ஆம். சோதிடர்களை எல்லாம் புரட்டன், புளுகன் என்று இதழ் தவறாமல் எழுதி, படிக்கும் வாசகனை உசுப்பேத்திவிட்டு, இப்போது முகப்பில் சோதிடனை வெளியிட்டு குளிர் காய்கிறார் சிறப்பாசிரியர் முனைவர் இளமாறன்.

விஞ்ஞானத்திற்கு புறம்பான, நம்பகத் தன்மை இல்லாத நூதன மோசடி தொழில் சோதிடம் என்பது என விளக்கவுரை வழியும் இவ்விதழ், ஒரு புகழ் பெற்ற சோதிடரை முகப்பில் தாங்கலாமா ?

தமிழ்நாட்டில் பெரும் சாதனையாளர்களை அட்டையில் வெளியிட்டு பெருமை சேர்த்த முகம், அச்சாதனையாளர்களை சோதிடரோடு சேர்த்து அசிங்கப்படுத்தி கேவலப்படுத்தி விட்டது.

சோதிட, சாஸ்திரத்தை நம்பி இதுவரை எத்தனையோ பேர் உயிர்பலியாகி இருக்கிறார்கள். ஆனாலும் மனிதனுக்கு ஏற்படுகிற குடும்ப பிரச்சனை, தொழில் சிக்கல் ஆகியவற்றிற்கு பகுத்தறிவு இல்லாதவர்கள் சோதிடனை நம்பி பணத்தைக் கொட்டித் தொலைக்கிறார்கள்.

அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை அனைத்து சோதிடரும் பரிகாரம், தோஷம் என்று கோயில்களுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் கொடுத்து தனது பாவத்தை நிவர்த்திக்கிறார்கள். இதில் எஸ்.ஏ.பி.வரதன் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா ?

கட்டுரையாளர் 'மனித நேய சோதிடர்' என போற்றுகிறார். சேவைப் பட்டியல் என நீட்டுகிறார். இது மிகப் பெரிய தவறு. ஏனெனில் எந்த சோதிட சக்கரவர்த்திகளும் ஏழைகளுக்கு மனம் உவந்து ஒரு சல்லி காசு கூட தருமம் செய்வதில்லை.

மதம், மொழி, இனப் பாகுபாடின்றி ஏழை, எளிய மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை ஒரு சிலருக்கு கொடுத்து அதன் மூலம் எஸ்.ஏ.பி.வரதன் தன்னை நீதிவான், நியாயவான், நேர்மையாளன் என உலகோர்க்கு சித்தரிக்கிறார். அதை இளமாறன் எடுத்தியம்ப முயற்சிக்கிறார்.

கல்யாணம் எப்போது நடக்கும் ? குழந்தை ஆணா, பெண்ணா ? வீடு கட்டலாமா ? போன்ற ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனியே பணம் கறக்கும் பலே பேர்வழிகளை பக்கத்திற்குப் பக்கம் சிந்தனார் பதில்களில் தாக்குகிறார். ஆனால் சிறப்பாசிரியரோ மனிதநேயப் போர்வையில் சோதிடனின் மாண்பு காக்கிறார்.

ஆசிரியர் மாமணி தனித்தமிழ் தீவிரவாதியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டாலும், 'எஸ்' என்ற வடமொழியை எப்படி அனுமதி அளிக்கிறார்? ஆரிய பார்ப்பனர்களை ஆழகால விஷமிகளாக பாவித்து வரும் மாமணி வரதன் போன்றவர்களை திராவிட கழக உறுப்பினர்கள் என எண்ணுகிறாரா என்ன ?

முகம் தனது உண்மையான முகவரியை இழந்து நிற்கிறது. கொள்கைவாதிகள் பயணத்தில் சறுக்கல்கள் வரலாம். சரிந்து விழக்கூடாது. கொள்கை ஏடான முகம், குறுகிவிட ஆகாது.

**- ஏழைதாசன் விஜயகுமார்.**
அடப்பன்வயல், புதுக்கோட்டை.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை 'ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம்' கட்டுரைப் போட்டி தமிழவேள் இ.க. கந்தசாமி அறிவிப்பு

**இக் கழகம், கீழ்க்கண்ட தலைப்புகளில் கட்டுரைப் போட்டி நடத்துகின்றது. 1. திருஞான சம்பந்தரும் தமிழும் (2) திருஞான சம்பந்தரும் சைவமும் (3) திருஞான சம்பந்தர் தரிசித்த திருத்தலங்களில் அவரது உள்ளம் கவர்ந்த இயற்கைக் காட்சிகள் (4) திருஞான சம்பந்தர் தெரிவிக்கும் சிவனது இயல்புகளும் அருட் செயல்களும்.**

**ஆய்வுக் கட்டுரை 8x12 அளவுத் தாளில் 5 பக்கங்களில் அமையவேண்டும். இப் போட்டியில் 25 வயதிற்கு மேற்பட்டவரே பங்குபெற முடியும். ஆய்வுக் கட்டுரை 15-11-05க்குள் பதிவஞ்சலில் TAMIZHAVEL E.K.KANDASAMY,153, KANGESASAN DURAI STREET, KOKKUVIL,(YAZHPANAM), SRI LANKA என்ற முகவரிக்கு வந்துசேர வேண்டும்.**

**ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த கட்டுரைக்கு ஓராயிர ரூபாய் (இலங்கைப் பணம்) பரிசு வழங்கப்படும். நடுவர் தீர்ப்பே முடிவானது.**

# ஆய்வுத் தமிழ் – காலாண்டு இதழ்

அனைத்துப் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளின் தமிழ்த் துறையினர்க்கும் ஆய்வாளர்களுக்கும் இலவயமாக அனுப்பப் பெறும் ஆய்வுச் செய்தி காலாண்டு இதழ் பெறத் தங்கள் முகவரி, ஆய்வுப் பணி, நூல்கள் பற்றித் தெரிவியுங்கள். **முனைவர். பா. இறையரசன், ஆசிரியர், 'ஆய்வுத் தமிழ்' 419, 18ஆம் தெரு, குறட்டூர், சென்னை – 600 080. தொலைபேசி எண். 044 26251169 அலைபேசி 94444 56905.**

## வாசகர் வட்டம்

"படித்த முட்டாள் / இப்பவும் குடிக்கிறான் / பெப்சியும் கோக்கும்" உலகமயத்தின் வலையில் சிக்கிய தமிழனின் நிலையை நன்றாக உணர்த்தும் அய்க்கூ இது. பெப்சியும் கோக்கும் அமெரிக்காவில் தண்ணீர்க் குழாய் அடைப்பை நீக்கத்தான் பயன்படுத்துகின்றனர் என்பதை தமிழர்கள் அறிவரோ ? (தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தில் தெரிந்து கொண்ட செய்தி இது) மனித உடலைப் புதைத்தபின் இறுதியாய் அழிவது பற்கள் தானாம். அப்பற்களே இந்த பெப்சி, கோக்கில் 24 மணி நேரத்தில் கரைந்து விடுகிறதாம். அத்தகைய விஷபானம் நமது இரைப்பையை எப்படியெல்லாம் அரித்து நாசமாக்கும் என்பதை நினைக்கவே அச்சமாயுள்ளது.

– **நாணற்காடன்,** இராசிபுரம், நாமக்கல்.

இங்கிலாந்து இளவரசர் பாராட்டு – சண்முகப் பிரபுவின் விலாசம் – விஜயலெட்சுமி மாசிலாமணியின் கைவண்ணம் – துளிப்பாத் தோரணம் மிக்க சுவையாக உள்ளது. சரீஷ் உருக்கமாக ஒரு நடைப்பிணம் பற்றி எழுதி இருந்தார். சில எழுத்துக்கள் மிகச் சிறினவாக உள்ளது. வாசிக்க முடியவில்லை. 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் லோகேந்திரலிங்கம், பிரான்சு வண்ணை தெய்வம் இவர்களை என்றும் மறவேன். அவர்கள்தான் எனக்கு ஏணியாக நின்று ஏற்றியவர்கள். அலைகடலில் தோணியாகக் கரை சேர்த்த தெய்வாங்கள்.

– திருமதி **பத்மாவதி சீவரட்ணம்,** கனடா.



படிப்பகம்

www.padippakam.com

# 'டான்' தமிழ்ஒளி நிறுவனரும் 'ஈழநாடு' இதழாளருமான எஸ்.எஸ். குகநாதன் அவர்களின் நேர்காணல்

டான் (DAN) தமிழ்ஒளி சேனலை இந்தியாவில் அறிமுகப்படுத்திய பெருமை தமிழகத்தில் உள்ள Free to Air சேனல் ஆப்ரேட்டர்களையே சாரும். அதாவது அய்ரோப்பா, அமெரிக்கா, பிரான்சு நாடுகளைத் தொடர்ந்து தமிழ்ஒளி சேனல் நிர்வாகம் தனது எல்லையை விஸ்தரிக்கும் பொருட்டு இலங்கையில் ஒளிபரப்பைத் தொடர்ந்த போது அதன் காட்சிகள் (சிக்னல்கள்) தமிழகத்தின் தென்பகுதியில் சிதற ஆரம்பித்தன. இந்த வேளையில் வேறு ஏதாவது தமிழ்ச் சேனல்கள் கிடைக்காதா என்று கண்ணில் விளக்கெண்ணெயை விட்டுப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சில Free to Air சேனல் ஆப்ரேட்டர்கள் இதன் காட்சிகளைப் (சிக்கனல்களை) பெற்று ஒளிபரப்பி வந்தபோது தமிழகம் முழுவதும் இந்தச் செய்தி காட்டுத்தீயாக பரவி அனைவருமே (SCV தவிர பெரும்பாலானோர்) கொடுக்க ஆரம்பித்தனர். இதன் பிறகுதான் தமிழ்ஒளி சேனல் நிர்வாகத்திற்கே இந்தியாவில் தனது ஒளிபரப்பைத் தொடங்க வேண்டும் என்று ஆசை வந்ததாகத் தெரிகிறது.

தமிழகத்தின் பல பகுதிகளில் டான் (DAN) தமிழ்ஒளி ஒளிபரப்பப்பட்டு வந்தாலும் இது எங்கிருந்து ஒளிபரப்பாகி வருகிறது. இதன் ஒளிபரப்பாளர்கள் யார் என்றெல்லாம் தெரியாமல் பலவாறாக பேசப்பட்டு வந்தது. அதாவது இந்தச் சேனல் விடுதலைப் புலிகளின் சேனல்; இதில் புதிய திரைப்படங்கள் ஒளிபரப்பு உரிமை இல்லாமல் ஒளிப்பரப்பாகி வருகிறது. புதிய திரைப்படங்களை ஒளிபரப்பும் போது சேனலின் லோகோவை நீக்கிவிட்டு ஒளிபரப்புகிறார்கள் என்று பலவாறாக பேசப்பட்டு வந்த நிலையில் இதன் உரிமையாளர்களை கண்டுபிடித்து நேயர்களின் யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்த நாம் அவர்களிடம் நேர்முகம் கண்டோம். இதோ தமிழ்ஒளி உரிமையாளர்களின் தனித்த நேர்காணல் !

## இந்தியாவிற்கு வெளியே ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ்ச் சேனல்

**உங்கள் நிறுவனத்தைப் பற்றி பலவாறாக யூகங்கள் உள்ள நிலையில் அதனை நீக்கும் பொருட்டு உங்கள் நிறுவனத்தைப் பற்றிக் கூறுங்கள்.**

எங்கள் நிறுவனம் பல வருடங்களாக இத்துறையில் வெற்றிகரமாக இயங்கி வருகின்றோம். DAN என்பதற்கு Dish Asia Network என்று பொருள்.

**உங்கள் நிறுவனத்தில் பங்குதாரர்கள் அல்லது இதனை சார்ந்தவர்கள் யாரெல்லாம் உள்ளனர் ?**

நான் திரு.குகநாதன் தலைவர் & CEO ஆக உள்ளேன். மற்றும் எங்கள் நிறுவனத்தின் மற்ற இயக்குநர்கள் திரு. குலாம் உசேன். இவர் ஒரு தமிழர். இவர் கேபிள் டி.வி. உரிமையாளரும் கூட. இவர் சென்னையில் கேபிள் டி.வி. நடத்தி வருகிறார். இதன் மற்றொரு இயக்குநர் திரு.மணிவேல் மெல்லோன். இவரும் ஒரு தமிழர். இவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர். பிரான்சு நாட்டில் உள்ளார். மற்றொரு இயக்குநர் திரு. ஷேக் கமால். இவர் துபாயைச் சேர்ந்தவர். நாங்கள் அனைவரும் சேர்ந்து பல வருடங்களாக தொழில் செய்து வருவதால் எங்களைப் பற்றி கவலைப் படவும் பயப்படவும் தேவையில்லை. என்னைப்பற்றி கூற வேண்டுமானால் நான் இலங்கைத் தமிழன். ஆனால் என்னுடைய பூர்வீகம் தமிழகம். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவன். என்னுடைய மூதாதையர்கள் இலங்கைக்கு சென்றதினால் நான் இலங்கைத் தமிழனானேன். ஆனால் நான் பச்சைத் தமிழன். ஆகவே எங்களை யாரும் வேறு கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம்.

**டான் தமிழ்ஒளி விடுதலைப்புலிகளின் சேனல் என்ற பேச்சு பரவலாக உள்ளதே. இதனைப் பற்றி தாங்கள் கூற விரும்பும் கருத்து என்ன ?**

## "மெகா தொடர்களும் அழுது வடியும் நாடகங்களும் கண்டிப்பாக இருக்காது"



படிப்பகம்

www.padippakam.com

இதனை முதலில் மறுக்கின்றேன். இது ஒரு தவறான கருத்து. நான் இலங்கையில் சில நண்பர்களோடு சேர்ந்து TRT என்ற சேனலை நடத்தி வந்தோம். அதாவது 1997 முதல் நடத்தி வந்த நிலையில் அந்தச் சேனலை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மாற்ற நண்பர்கள் கூறியபோது அதனை விட்டு 2000 ஆண்டில் வெளியே வந்தேன். அந்தச் சேனலை தற்போது வேறு பெயரில் நடத்தி வருகின்றனர். இந்த TRT சேனலுக்கு மேலும் ஒரு பெருமை என்ன வென்றால் இந்தியாவிற்கு வெளியே ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ்ச்சேனல் என்று மார்தட்டி பெருமைப்படுவோம். அவ்வாறு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்றால் TRT யிலேயே தொடர்ந்து இருந்துருப்பேன் அல்லவா ? யார் எங்களைப் பற்றி என்ன கூறினாலும் பரவாயில்லை. மொத்தத்தில் நாங்கள் வியாபாரிகள் அதனை புரிந்து கொள்ளட்டும்.

**டான் தமிழ் ஒளி சேனலைப் பற்றிக் கூறுங்கள் ?**

டான் தமிழ்ஒளி சேனலைப் பற்றிக் கூற வேண்டுமானால், இந்தச் சேனல் இந்தியாவிற்கு வேண்டுமானால் புதிய சேனல். ஆனால் அய்ரோப்பா, அமெரிக்கா, கனடா, பிரான்சு போன்ற நாடுகளில் வெற்றிகரமான தமிழ்ச் சேனல். டான் தமிழ்ஒளி 24 மணி நேர தமிழ்ச் சேனல். இதில் வித்தியாசமான பொழுதுபோக்கு அம்சங்களுடன் நிகழ்ச்சிகளைக் கொடுக்க உள்ளோம். இதில் முக்கியமாக மெகா தொடர்களும் அழுது வடியும் நாடகங்களும் கண்டிப்பாக இருக்காது. உலகத்தில் எந்த நாட்டில் தமிழர்கள் வாழ்ந்தாலும் அங்கு தமிழர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதனை மற்ற தமிழர்கள் தெரிந்து கொள்ள செய்வதே எங்கள் நோக்கம். இந்தச் சேனல் தமிழர்களின் கலாச்சாரத்தை பறைசாற்றும் கருவியாக செயல்படும். பல தமிழ்ச் சேனல்கள் வெளிநாடுகளில் ஒளிபரப்பாகின்றன. இங்கு பிரைம் டைம் என்றால் அமெரிக்காவில் இரவு அவர்கள் உறங்கும் நேரத்தில் பல நிகழ்ச்சிகள் வரும். ஆனால் அவர்களால் அந்த நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாது. எல்லா சேனல்களும் இரவு பாடல்களை மட்டுமே ஒளிபரப்பாகிறார்கள். இங்கு இரவு பாடல்கள் ஒளிபரப்பாகும் நேரம் அமெரிக்காவில் பிரைம் டைம். இதனைக் கருத்தில் கொண்டு நாங்கள் தமிழ்ஒளி சேனலில் 8 மணிநேர நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளிபரப்பி பின்பு அதனை மறு ஒளிபரப்பு செய்து வருகின்றோம். முதலில் 8 மணி நேர நிகழ்ச்சி இந்தியாவில் புது நிகழ்ச்சி. அடுத்து 8 மணி நேர நிகழ்ச்சி அய்ரோப்பாவில் புதியநிகழ்ச்சி. இந்தியாவில் மறு ஒளிபரப்பு அடுத்த 8 மணி நேர நிகழ்ச்சி. அமெரிக்காவில புதிய நிகழ்ச்சி. இந்தியா, அய்ரோப்பாவில் இது மறு ஒளிபரப்பு நிகழ்ச்சி. இவ்வாறு நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

மேலும் இச்சேனலில் நாங்கள் வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் பழக்க வழக்கங்கள் உலகறிய செய்ய உள்ளோம். எங்களிடம் 50,000க்கும் மேற்பட்ட ஆங்கிலப் படங்கள் உள்ளன. இதனை தமிழாக்கம் செய்ய திட்டமிட்டுள்ளோம். வெளிநாட்டு உரிமை படங்கள் அதிக அளவில் வாங்க திட்டமிட்டுள்ளோம். இதுவரை எந்தச் சேனலிலும் சிங்கள சீரியல்கள் வரவில்லை ஆகவே எங்கள் சேனலில் சிங்கள சீரியல்களை தமிழ் டப் செய்து ஒளிபரப்ப திட்டமிட்டு உள்ளோம். ஆனால் எங்கள் சேனலில் மெகா சீரியல்கள் கண்டிப்பாக இருக்காது.

**DAN சேனல்களின் கட்டண விவரம்**

| | |
|---|---|
| DAN சினிமா, DAN மியூசிக் Trace TV, Euro News | Rs. 12 |
| Euro Sports News, World Fashion TV, Travel Channel, Baby TV, Wine TV | Rs.12 |
| DAN சினிமா, DAN மியூசிக் Tracve TV, Euro News, Euro Sports News, World Fashion TV, Travel Channel, Baby TV, Wine TV | Rs.20 |



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ஒளி சேனல் கட்டண தொலைக்காட்சியா ? இலவச தொலைக்காட்சியா ?

தமிழ்ஒளி சேனல் இலவச சேனலாகவே தொடர்ந்து வெளிவரும். இதனை கட்டணச் சேனல்களாக மாற்ற எங்களுக்கு விருப்பம் கிடையாது. ஆனால் நாங்கள் DAN சினிமா DAN மியூசிக் என்ற இரண்டு தமிழ்ச்சேனலைக் கொண்டுவர திட்டமிட்டு உள்ளோம். இது கட்டண சேனல் இந்த இரண்டு சேனலை வாங்குபவர்களுக்கு மேலும் இரண்டு ஆங்கிலச் சேனல் சேர்த்து நான்கு சேனலாக கொடுக்கத் திட்டமிட்டு உள்ளோம்.

எங்கள் குரூப் சேனல்கள் அனைத்தும் உலகத்தில் மிகச் சிறந்த சேனல்களாக விளங்கி வருகிறது. நாங்கள் எதையுமே சொல்லில் மட்டும் செய்யாமல் செயலில் காட்ட விரும்புகின்றோம். நாங்கள் வெற்றிகரமாக செயல்பட கேபிள் ஆப்ரேட்டர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதனை நானறிவேன். உலகத்தில் எந்த நாட்டில் என்றாலும் கேபிள் டி.வி. உரிமையாளர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் வெற்றிபெற முடியாது. உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் எங்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்று நம்பிக்கையோடு உங்களை வாழ்த்துகின்றேன்.

இந்த நேர்காணலின் போது திரு. குகநாதன் உடன் திரு. குலாம். திரு.கபிலன் ஆகியோர் உடனிருந்தனர். இவர்கள் அனைவரும் DAN குரூப் சேனல்களை வெற்றி பெற செய்வதில் உறுதியுடன் இருக்கின்றனர்.

✧ கேபிள் டி.வி. குரல்


**YAMAL - 49.5°E**

| | |
|---|---|
| Frequency | 3952 |
| Symbol Rate | 4500 |
| Fec | 7/8 |
| Pol | Left Hand Circle |

**தொழில் நுட்பங்களுக்கு :**

**9884006099**




*அன்பிற்கினிய வாசகர்களே,*
*உலக அளவில் பரந்து விரிந்த வாசகர் தளத்தில் இயங்கி வரும் ஏழைதாசன் ஏடுக்கு உங்கள் உறுப்பினர் கட்டணத்தை ரூ 60/- புதுப்பித்து ஆதரவு நல்கிடுவீர்.*

***வாசகர்கள் கவனத்திற்கு...***

***கூட்ட அறிக்கைகள், இலக்கிய நிகழ்ச்சிகள், போட்டி அறிவிப்புகள் வெளியிட விரும்புவோர் சிறுதொகை ரூ.100/- நன்கொடையாக சேர்த்து அனுப்புங்கள்.***


ஏழைதாசன்

மலர் 14 - இதழ் 3

திருவள்ளுவர் ஆண்டு 2036

ஐப்பசி

**கட்டண விபரம்**

**உள்நாடு (அஞ்சல் வழி)**

ஆண்டுக் கட்டணம் : ரூ. 60/-
வாழ்நாள் கட்டணம் : ரூ. 600/-
புரவலர் நன்கொடை: ரூ. 1000/-

**வெளிநாடு (வான்வழி)**

ஆண்டுக் கட்டணம் : US$ 10/-
வாழ்நாள் கட்டணம் : US$ 100/-
புரவலர் நன்கொடை: US$ 200/-

**விளம்பரக் கட்டணம்**

வெளிநாடு

முழுப்பக்கம் : ரூ. 1000/-
அரைப்பக்கம் : ரூ. 500/-

உள்நாடு

முழுப்பக்கம் : ரூ. 500/-
அரைப்பக்கம் : ரூ. 250/-

**பெயர்** : EALAIDHASON
**வங்கி இலக்கம்** : A/c No. 90259
**முகவரி** : INDIAN BANK, PUDUKKOTTAI PIN - 622 001. TAMIL NADU, INDIA


படிப்பகம்

www.padippakam.com

# 'அய்க்கூ' துளிகள்

✣
சிமினி விளக்கின்
வெளிச்சத்தில் படிக்கிறான்
மின்வாரிய ஊழியனின் மகன் !

- இரா. சந்திரன்,
நாமகிரிப்பேட்டை, நாமக்கல்.

✣
வீட்டை விட்டு
வெளியே வாருங்கள்
மழை வருகிறது !

- அஸ்லம் பாஷா
ஆம்பூர், வேலூர்.

✣
பெருகும் தொழிற்சாலைகள்
கடைகளில் கிடைக்கும்
சுவாசக் காற்று !

- சிவராச. செல்வக்குமரன்
பேராவூரணி, தஞ்சாவூர்.

✣
நெருப்போடு விளையாட்டு
தீக்குச்சிப் பணியில்
சிறுவர்கள் !

- கலைவாணி கிருட்டிணன்,
டாடாபாத், கோவை -12.

✣
உடை களைந்து குளிக்க
இரவிலும் வெட்கம்
குளத்து நிலா !

- பொன்னியின் செல்வன்
வேதியபுரம், தஞ்சாவூர்

✣
பள்ளிப் படிப்பை மற
குடி குடியைக் கெடுக்கும்
டாஸ்மாக்கில் வேலை !

- இராம. பாண்டியன்
பெருங்காடு, புதுக்கோட்டை.

✣
மழை என்று குடை பிடித்தேன்
புயல் வந்து குடையைக்
கொண்டு போனது !

- பத்மாவதி சீவரட்டணம்,
கனடா

✣
ஆற்றில் கலக்கும்
சாக்கடை நீர்
காலரா !

- கி. இராஜகுமாரி,
செய்யாறு, திருவண்ணாமலை.

✣
தன்னைப் பாதுகாத்துக் கொள்ள கையில்
தக்க ஆயுதத்துடன்
தமிழ் !

- டாக்டர். இளங்கம்பன்,
பழனி, திண்டுக்கல்.

✣
தேர்தல் நேரம்
தெருவில் நடக்கின்றன
விலை போன நட்சத்திரங்கள் !

- நாணற்காடன்,
இராசிபுரம், நாமக்கல்.

✣
அரசாங்கம்
சலுகை அறிவிப்பு
தேர்தல் அறிகுறி !

- ஞா. நெல்சன்,
மடத்தச்சம்பாடு, நெல்லை.

✣
பூப்பெய்தினாள் மகள்
பூரித்தாள் தாய்
புழுங்கினான் தந்தை !

- ஆறு. தமிழ்நிதிவேந்தன்,
காரைக்குடி, சிவகங்கை.

✣
மழைக் காலம்
வார இதழ் இணைப்பாய்
இலவச ஐஸ்கிரீம் கூப்பன்கள் !

- சு. கவினேஷ்
சென்னை - 42.

✣
அரசாங்க முத்திரையோடு
காதலி அனுப்பியது
கடிதத்தில் முத்தம் !

- கமலி வெங்கட்,
வெண்ணந்தூர், நாமக்கல்.

அக்டோபரில் மலர்ந்த அய்க்கூ துளிகள் அனைத்தும் மனங்கவர்ந்தன. செம்மொழி - தொடரும் ஏமாற்று வேலை எனும் கட்டுரை சவுக்கடியாய் உள்ளது. எத்தனை முறை ஏமாந்தாலும் தமிழன் தன்னை மாற்றிக் கொள்வதாய் இல்லை. இந்நிலை மாறி தமிழன் விழிப்புணர்வு பெறுகையில்தான் தமிழுக்கும் தமிழனுக்கும் உயர்வு என்பது சாத்தியமாகும். மேலும் இதழில் இடம் பெற்ற அனைத்து அம்சங்களும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தன.

- சு. கவினேஷ், சென்னை - 42.



படிப்பகம்

www.padippakam.com




## தீராத நோய்கள் எல்லாம் தீர்க்கும் இவன் ஒரு சித்தன்
## இவன் தொட்டிடில் பிணிகள் போம் (அருள்வாக்கு)

சித்த மருத்துவ மேதை
அரிமா டாக்டர்
**A. தேவராஜன்,** R.M.P. (IND) C.B.I.M. அவர்கள்

கீழ்கண்ட நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறார்.

எய்ட்ஸ், மூலம், பவுத்திரம், ஆணிக்கால், சிறுநீரக கல்லடைப்பு (அறுவை சிகிச்சை இன்றி) முகவாத சன்னி, வயிற்றுவலி, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, மலட்டுத்தன்மை, குழந்தைகள் உண்டாகுமா? உண்டாகாதா ? என்பதை சிறிய பரிசோதனையின் மூலம் துல்லியமாக கூறப்படும். சிகிச்சையும் அளிக்கப்படும். ஆண்மைக்குறைவு சொப்பன ஸ்கலிதம், சருமவியாதிகள், இருமல், இளைப்பு மற்றும் பல நோய்களுக்கு சிகிச்சை உண்டு.

மருத்துவத் துறையில் 50 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். 79 வயது நிரம்பியவர். சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். எய்ட்ஸ் சிகிச்சைக்காக சிறப்பு பயிற்சி பெற்றவர். அரிமா இயக்கத்தில் "எய்ட்ஸ்" நோய் பிரிவிற்கு மதுரை மாவட்டத்திற்கு தலைவராக இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் முதலிய நாடுகளுக்கு சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர். லண்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து நாடுகளில் இருந்து வந்த எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து புகழ்பெற்றவர். அமைச்சர்களாலும், பத்திரிகையாளர்களாலும் பாராட்டப் பெற்றவர்.

சித்தமருத்துவ மேதை
அரிமா டாக்டர்.
**A. தேவராஜன்** R.M.P. (IND) C.B.I.M.
மனோன்மணி மருத்துவமனை
7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் (TK)
மதுரை (DT) - 625 703. ☎ : (04549) 275695
**Cell : 94437 - 75695**

பிரதிமாதம் 10, 25 தேதிகளில் மதுரையில் கீழ்கண்ட முகவரியில் டாக்டரை சந்தித்து சிகிச்சை பெறலாம். நேரம் காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை. மற்ற நாட்களில் எனது புதல்வர் டாக்டர்.D.C.செங்குட்டுவன் அவர்களிடம் ஆலோசனை பெற்று மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம். பேரையூர் வர விரும்பினாலும் வரலாம். தபால் மூலம் ஆலோசனை பெற ரூ. 25/- அனுப்பவும்.

டாக்டர் **D.C.செங்குட்டுவன்** B.Sc.,D.H.M.S.,
டாக்டர் **ப்ரீதா செங்குட்டுவன்** D.H.M.S.,
போன் : (0452) - 521354 (கிளினிக்)
650692 (வீடு)

**ஹோமியோ ஹோம்**
ப்ரீதா கம்ப்யூட்டரைஸ்டு ஹோமியோ கிளினிக்
S-7, *சிங்ஸ் கோர்ட், அன்னபூரணா ஹோட்டல் அருகில்,*
*அண்ணா பஸ் நிலையம், மதுரை - 625 020.*

பஸ்ஸில் இறங்க வேண்டிய இடம் :
அண்ணா பஸ் நிலையம், மதுரை
வேலை நேரம் :
காலை 9.30 முதல் 11 மணி வரை
மாலை 7.30 முதல் 9 மணி வரை
சனி காலை 9.30 முதல் 11 மணி வரை
சனி பிற்பகல், ஞாயிறு விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON* TAMIL MONTHLY* RNI Regd. No. 55308/92
R.C. No. 22449/98 * Registered No. PMG/CR/01/03-05/PDK

## இலண்டன் தமிழினி சஞ்சிகை
## சென்னை மணிமேகலைப் பிரசுரம் நடத்தும்
## தமிழர் தந்தை ஆதித்தனார் கட்டுரைப் போட்டி

# பரிசு ரூ. 20 ஆயிரம்

சென்னை, அக். 6- 'தமிழர் தந்தை ஆதித்தனார்' என்ற பெயரில் இலண்டன் தமிழினி சஞ்சிகை, சென்னை மணி மேகலைப் பிரசுரம் ஆகியவை இணைந்து மாணவ, மாணவிகளுக்கான கட்டுரைப் போட்டியை நடத்துகிறது. இதற்கு ரூ. 20 ஆயிரம் பரிசு வழங்கப்படும்.

### கட்டுரைப் போட்டி

இலண்டன் தமிழினி சஞ்சிகை, சென்னை மணிமேகலைப் பிரசுரம் இணைந்து தமிழர் தந்தை ஆதித்தனார் நூற்றாண்டு நிறைவு கட்டுரைப் போட்டியை நடத்துகின்றன.

### வயது வரம்பு

இந்தப் போட்டி இரு பிரிவுகளாக மாணவ-மாணவிகளுக்காக நடத்தப்படுகின்றது. 18 வயதிற்குட்பட்ட மாணவ - மாணவிகளுக்காக ஒரு பிரிவும், 18 வயதிற்கு மேற்பட்ட மாணவ - மாணவிகளுக்கு அடுத்த பிரிவும் நடைபெறும்.

### விதிமுறைகள்

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தாங்கள் பயிலும் கல்வி நிறுவனங்களில் இருந்து அவர்கள் அந்நிறுவன மாணவர்கள் என்பதனை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் இணைக்க வேண்டும். கட்டுரைகள் 5 முழுப் பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். 'தமிழர் தந்தை ஆதித்தனார்' என்பது கட்டுரையின் தலைப்பாகும்.

### ரூ. 20 ஆயிரம் பரிசு

வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக 5 ஆயிரம் ரூபாயும், 2-வது பரிசாக 3 ஆயிரம் ரூபாயும், 3-வது பரிசாக 2 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். ஆக மொத்தம் ரூ.10 ஆயிரம் ரூபாய் வீதம் இரு பிரிவுகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மேலும் 25 ஆறுதல் பரிசுகளாக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 15-12-2005

அனுப்ப வேண்டிய முகவரி: தமிழர் தந்தை ஆதித்தனார் கட்டுரைப் போட்டி மே/பா. மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் : 1447, 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை -600 017.

பெறுநர் திரு.

Published, Printed and Owned by S. Vijayakumar
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2.
Published from 26, Adappanvayal 8th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA
Editor : S. VIJAYAKUMAR, B.A. Telephone No. 0091 - 04322 - 226 426.

படிப்பகம்